# இலங்கை அரசாட்சி கெசெற் பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,900 — 1932 ம் ௵ தைமீ 8 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV. நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரம்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் புத்தளம் டிஸ்திறிக் கரைத்தீவில் பள்ளிக்கூடத்திற்கு தோட்டத்திற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 7,655. குதிச்சி—கரைதீவு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | முத்தற்பேயர்வீட்டடி தோட்டம் | எழுபது வயதுள்ள இரண்டு தென்னமரமுள்ள தென்னந்தோட்டம் | கற்பிட்டியிலிருக்கும் எஸ். எம். தி. எம். முகமது நெயினு மரைக்காயரும், யூ. வீ. எம். ஒமர்கத்தா மரைக்காயரும், எஸ். எம். என். செயினு கமீது உசன் மரைக்காயரும், யூ. எஸ். சேகுகண்டு மரைக்காயரும், யூ. எஸ். முகம்மது செறிவ் மரைக்காயரும், புத்தளத்திலிருக்கும் யூ. எம். உமதுக்க மரைக்காயரும். யூ. எஸ். எம். எம். செல்ல மரைக்காயரும் (சொரியலாக) | 0 0 13·6 |
| 2 | மடுவடிதோட்டம் .. | ஏறக்குறைய ஒரு வயதுள்ள ஒரு தென்னம்பிள்ளையுள்ள தென்னந்தோட்டமும், ஒரு கிணறும், ஒரு கொட்டிலும் | கற்பிட்டியிலிருக்கும் எம். செகலதினு மரைக்காயர் வாப்பு மரைக்காயரும், எம். முகம்து மரைக்காயரும், கரைத்தீவிலிருக்கும் எம். சிலல்கிம் மரைக்காயரும், புத்தளத்திலிருக்கும் எம். அசன மரைக்காயரும், எம். செறிவ் மரைக்காயரும் (சொரியலாக) | 0 0 8·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ௵ மாசி மாசம் 13 ந் தேதியிலன்று பின்னேரம் 2 மணிக்கு கரைதீவு கிராமக்கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. 5–12–31 திகதி கொண்டதும் 11–12–31 திகதி கொண்ட 7,897 ம் இலக்க கசெற் பத்திரிகையில் வெளிப்பட்டதுமான அறிவித்தல் இத்தால் அழிக்கப்படுகின்றது.

வே. குமாரசுவாமி,
உதவி அரசாட்சி ஏசண்டு.

புத்தளக் கச்சேரி,
1931 ம் ௵ மார்கழிமீ 22 ந் உ.

1——J. N. 15898–122 (12/31)

T 1 —

## காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரம்.

### 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

*காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்*
*நொ. 60 (மாத்தளை).*

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சொந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1932 ம் ௵ (ஜனவரி) தைமீ 8 ௳ தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கைபொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1931 ம் ௵ (டிசெம்பர்) மார்கழிமீ 5 ௳ தேதியிலன்று மாத்தளைக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

சீ. ஈ. ஜோன்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டவர்கள், மாத்தளை.

குறிப்பு.—(*a*) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மாத்தளை உதவி அரசாட்சி ஏசண்டவர்களிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நிலஅளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(*b*) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

### அட்டவணை.

மத்திய மாகாணத்தில் மாத்தளை ஜில்லாவில் மாத்தளை தென் பிரிவின் அஸ்கிரிபல்லேசியபத்துவில் செலகம என்னும் கிராமத்தில் உள்ள கீழ்க்கண்ட துண்டுகள்.

#### 8,642 பிரதமபடம்.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 4 | பிட்டகந்தஊக்குலன் .. .. | 19 | 2 | 16 |
| 8 | பல்லகமவத்தையேனை, கங்கொடயேனை, அப்புகஸ்தென்னை, பொல்கஸ்யேனை .. | 26 | 3 | 0 |
| 10 | கங்கொடயேனை .. .. | 1 | 2 | 2 |
| | | 47 | 3 | 18 |

எல்லையாவது: வடக்கே-டி. பி. 110,041 கிழக்கே-மற்றவர்களாலும், எம். சோன் சில்வாவாலும் உரித்துப்பேசப்பட்ட கற்பாறை மட்டம், வாவுலகலவத்தஎல, டி. பி. 55,885, கங்கொடஎலவாலும், டி. பி. 55,330 யாலும், டி. பி. 55,329 யாலும் உரித்துப்பேசப்பட்ட டி. டிங்கிரி; தெற்கே-வலகும்புறஎல, மற்றவர்களாலும், டி. டிங்கிரியாலும் உரித்துப்பேசப்பட்ட வலகும்புற, வெட்டஆராலும், யாய பன்சல பரிபாலனர்களாலும் உரித்துப்பேசப்பட்ட அம்பகாவெல, கஜூவாவால் உரித்துப்பேசப்பட்ட வடமுல்லவெல, மற்றவர்களாலும், டி. டிங்கிரியாலும், அரசாலும் உரித்துப்பேசப்பட்ட பல்லேகமவத்த, (துண்டு 9, பி. பி. 8,642), மாலஎல, டி. பி. 55,330, அப்புகஸ்தென்னஎல; மேற்கே-மற்றவர்களாலும், இ. எச். விஜயநாயக்கவாலும் அரசாலும் உரித்துப்பேசப்பட்ட குருந்துபுவாகொள்ள அரம்ப, (துண்டு 5, பி. பி. 8,642), மாலஎல, ஹுவிஸ் வெளியிட்ட தோட்டம், டி. பி. 122,837, அரசால் உரித்துப்பேசப்பட்ட ஹுவிஸ் வெளியிட்ட தோட்டம், துண்டு 3, பி. பி. 8,642, ஹுவிஸ் வெளியிட்ட தோட்டம், டி. பி. 122,837, அரசால் உரித்துப்பேசப்பட்ட ஹுவிஸ் வெளியிட்ட தோட்டம் (துண்டு 2, பி. பி. 8,642, துண்டு 1, பி. பி. 8,642).

---

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.